5. விதி 110-ன்கீழ் அறிக்கை

ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய தலைமைச் செயலக பிளாக் 'ஏ' கட்டடத்தில் பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனையும் பிளாக் 'பி' கட்டடத்தில் அரசு மருத்துவக் கல்லூரியும் அமைப்பது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் இன்னது எனக் கண்டறிந்து, பின் அது உண்டான காரணத்தை அறிந்து, அதன்பின் அந்நோயைத் தீர்ப்பதற்கான வழிமுறையைக் கையாண்டு, நோய் நீங்க மருத்துவம் செய்யவேண்டும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளை எய்தும் நோக்குடன் தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம்* National Rural Health Mission, *தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம்* Tamilnadu Health System Project *என்னும் இரண்டு மாபெரும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

பிற்பகல் 12-10

தகுதி வாய்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், நவீன உபகரணங்கள் ஆகியவற்றுடன் சுகாதாரமான சுற்றுச்சூழலைக் கொண்ட தரமான மருத்துவ சேவையைத் தாராளமாக அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் விதமாக ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துதல், (மேசையைத் தட்டும் ஒலி) உயிர்காக்கும் உபகரணங்களைத் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்தின்கீழ் 55 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்குதல், உணவுப் பாதுகாப்பு, மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகத்திற்கென தனியாக ஒரு ஆணையரகத்தை உருவாக்குவது, திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம், அதாவது Super Speciality Centre *அமைத்தல், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் வீட்டிற்கே சென்று சுகாதார*

வசதிகள் அளிக்கக்கூடிய நடமாடும் மருத்துவமனை என்னும் புதிய திட்டம் உட்பட, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சிறப்புத் திட்டங்கள் எனது தலைமையிலான அரசின் 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள்.

இவைமட்டுமல்லாமல், அனைவருக்கும் மருத்துவ சேவையை நல்கும் வகையில் முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்படும் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில், அரசு மருத்துவமனைகளிலுள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழையெளிய மக்கள் பல்வேறு நோய்களுக்கும், தரமான உயரிய சிகிச்சையினை இலவசமாகப் பெறும் வகையில் பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனை அதாவது Multi Super Speciality Hospital (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மருத்துவமனை, சென்னை மாநகரத்தின் மையப் பகுதியான அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் முந்தைய தி.மு.க அரசால் புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காகக் கட்டப்பட்ட 97,829 ச.மீ. தள பரப்புக்கொண்ட Block A கட்டடத்தில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தக் கட்டடம், சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத்தில் தற்போதுள்ள 36 துறைகளும் செயல்படுவதற்குப் போதுமானதாக அல்ல என்பதாலும், பயன்படுத்தக்கூடிய இடம் வெகுகுறைவாக இருப்பதால், அலுவலகப் பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் இந்தக் கட்டடம் இல்லை என்பதாலும், இருவேறு கட்டடங்களிலிருந்து தலைமைச் செயலகம் செயல்பட முடியாது என்பதாலும், சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். தற்போது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டடம் ஏழையெளிய மக்களுக்குப்

2011 ஆகஸ்ட் 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டடம் ஏழையெளிய மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் இந்தப் பல துறை உயர் சிறப்பு மருத்துவமனையை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

இந்தக் கட்டடத்தில் பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை அமையும் வகையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு, மருத்துவ வல்லுநர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு உயர் தர மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான நவீன உபகரணங்கள் வாங்கப்பட்டு, இந்த மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மருத்துவமனை புதுடெல்லியிலுள்ள AIIMS – All India Institute of Medical Sciences மருத்துவமனைக்கு இணையான வசதிகளுடன் விளங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் தற்போது கட்டப்பட்டு வரும் பிளாக் 'பி' கட்டடங்களில் புதியதாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஒரு நல்ல சூழ்நிலையில், ஆரோக்கியமுடன், நலமுடன் வாழ வேண்டும் என்ற வகையில், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், எல்லோர் சார்பிலும், வடசென்னையிலே இது அமையப்பெறுவதனால் வடசென்னை தொகுதி மக்கள் சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)